**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-08012023-6629

Volume: 8

Issue: 1

Month: July

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 16.04.2023

Accepted: 21.06.2023

Published: 01.07.2023

Citation:
Ameena Banu, S. "Existence of Muslim Women Narration of the Irandam Jamangalin Kathai." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 1, 2023, pp. 54–60.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i1.6629

*Corresponding Author:
ameenaaji@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Existence of Muslim Women Narration of the Irandam Jamangalin Kathai

**S. Ameena Banu**
*Assistant Professor, Tamil Department*
*Sadakathullah Appa College, Tirunelveli, Tamil Nadu, India*
*http://orcid.org/0000-0001-9512-1590*

**Abstract**

Early Islamic innovation was largely focused on the lives of religious people. Lebbais and fishers, Neo muslims living in the basement – Margins of this site peas. So far no comprehensive work has been produced on the life of the people classified as women. Contemporary creators are addressing this shortcoming. Salma"s works can also be identified in that order. Since the creator Salma is a woman, her works are centered on the world of women. This article examines the presence of women in one of the works, the novel of the Irandam Jamangalin Kathai.

**Key Words:** Islamic Novel, Marginalized, Islamic Women, Homeless Women, Destitute Women, Divorced Women

**References**

1. Salma. 2009. *Irandam Jamangalin Kathai*, Nagarkovil, Kalachuvadu Publication.
2. Rasul. H.G. 2006. *Islamic Feminism*, Chennai, Bharti Budhkalayam.
3. Aloysius. 2005. *Periyar"s view of Islam and Buddhism*. Erode, Pudumalar Publishing House.
4. Aravanan, K.P. 1904. *Cultural Invasions on Tamils*, Puducherry, Tamilkottam.
5. Aravann, K.P. History of the Tamil People during the Islamic Period, Tamilkottam, Chennai, .
6. Kalandai Peermohamed. 2008. *Islam in Chronlogical Records*, Nagarkovil, Kalachuvadu Publication.
7. Thirumalai. 1988. *Fiction Literary Period*, Chennai, Iynthinai Publishing.
8. Paramasivan, T. 2010. *Panpattu Asaivugal*, Nagarkovil, Kalachuvadu Publishing.
9. Mahathi, 2011. *Islam Paraviya Varalaru*, Chennai, Universal Publishing.
10. Rasul, H.G. 2008. *Kuraniya Mozhiyadalgal Meelvasipin Tharunam*. Thakkalai, Saram Publishing.

# இசுலாமிய மகளிரின் "இருத்தல்": இரண்டாம் ஜாமங்களின் கதை வழிப்புரிதல்

*முனைவர் செ. ஆமினா பானு*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சதக்கத்துல்லா அப்பா கல்லூரி, திருநெல்வேலி

***ஆய்வுச் சுருக்கம்***

*தொடக்ககால இசுலாமியப் புதினப் படைப்பாக்கங்கள் பெரிதும் சமயம் சார்ந்த மக்களின் வாழ்வியலைக் குறித்து மட்டும் கவனம் கொள்வதாகவே படைக்கப்பட்டுள்ளன. இத்தளத்தில் அடித்தள–விளிம்புநிலையில் வாழும் லெப்பைகள், மீன்காரர்கள், பட்டாணியர்கள், நவ்முஸ்லீம்கள், பெண்கள் என்ற பிரிவினரான மக்களின் வாழ்வியல் குறித்து இதுவரைப் படைப்புகள் பெரிய அளவில் உருவாக்கம் பெறவில்லை. அந்த வரிசையில் சல்மாவின் படைப்புகளையும் அடையாளப்படுத்தலாம். படைப்பாளர் சல்மா பெண் என்பதால் அவரின் படைப்புகள் பெண் உலகத்தை மையமிட்டே அமைந்துள்ளன. அப்படைப்புகளில் ஒன்றான இரண்டாம் ஜாமங்களின் கதைப் புதினத்தில் இடம்பெற்றுள்ள பெண்களின் இருப்பு குறித்து ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

***திறவுச் சொற்கள்:*** *இசுலாமியப் புதினம், விளிம்பு நிலையினர், இசுலாமிய மகளிர், இல்லற மகளிர், கைம்மை மகளிர், மணமுறிவு மகளிர்*

## முன்னுரை

தொடக்கமாக ஆணாதிக்கச் சமூகத்தில் மகளிரின் உரிமைகள் பறிக்கப்படுவதும், ஒடுக்கு முறைக்கு உள்ளாவதும் சமய வேறுபாடுகளின்றி நிகழ்ந்தேறி வருகின்றன. இந்நிகழ்வுகளைப் பல்வேறு இலக்கிய வடிவங்களினூடாகப் படைப்பாளிகள் புலப்படுத்தி வருகின்றனர். அதே போல் மிக நீண்ட இலக்கிய வரலாற்றுப் பரப்பினைக் கொண்டுள்ள இசுலாமியச் சமூகமும் நவீன இலக்கியங்களில் கணிசமான பங்களிப்பினைச் செய்து வருகின்றன. அத்தகையதொரு இலக்கியக் படைப்பான குறிப்பாக புதினமான இலக்கிய வெளிக்குள் அதிர் வலைகளை ஏற்படுத்திய சல்மாவின் "இரண்டாம் ஜாமங்களின்" கதைப் புதினம் முன்னிறுத்தும் இசுலாமிய மகளிரின் இருத்தலை எடுத்துக்காட்டுவதாய் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## இசுலாமிய மகளிர் வாழ்வுலகம்

பிறப்பு முதல் இறப்புவரை மகளிரின் வாழ்வியல் சமயத்தின் பெயரால் ஆண்களால் தீர்மானிக்கப்படுகிறது. அதற்கேற்ப வாழ்வதற்குப் பெண்கள் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்கின்றனர். அடுத்த தலை முறையினரையும் அதற்கேற்பவே தயார்படுத்தி வருகின்றனர் என்பதே நிதர்சனம். இத்தகு சூழலில் அடிமைத்தனத்தையும் ஆணாதிக்கத்தையும் வென்றெடுக்கும் போது இசுலாமிய மகளிருக்கு ஏற்படும் சிக்கல்களை இரண்டாம் ஜாமங்களின் கதைப் புதினம் பிரதி பலித்துக்காட்டுகிறது. இப்பிரதிபலிப்பை இல்லற மகளிர், கைம்மை மகளிர், மணமுறிவு மகளிர், இசுலாமிய மகளிரும் சமூகக் கட்டுப்பாடுகளும், இசுலாமிய மகளிரும் சமயக் கட்டுப்பாடுகளும் என்னும் வகைப்பாட்டில் அணுகலாம்.

**இல்லற மகளிர்**

இல்லற மகளிர் இல்லறத்தையே தனது சமூக வெளியாகக்கொண்டு வாழ்கின்றனர். அதிலும் குறிப்பாக இசுலாமிய மகளிர் இல்லறத்தில் சமையலறை, படுக்கை அறை மட்டுமேதங்களது 'வெளி' யாகக்கொண்டிருப்பது நடப்பியல் நிகழ்வாகும். இச்சூழல் இருப்பைக் கொண்டுள்ள இசுலாமிய இல்லற மகளிர் அனைத்துக் கட்டங்களிலும் உரிமைகள் மறுக்கப் பட்டவர்களாகக் காணப்படுவதை இப்புதினம் சித்தரித்துக்காட்டியுள்ளது எனலாம். சான்றாக, இல்லற மகளிர் தனது விருப்பத்திற்கேற்ப குழந்தைகளைப் பெறுவதற்கும் குடும்பக் கட்டுப்பாடு செய்வதற்கும் உரிமை இல்லை என்பதை, ஆய்வுக்குட்பட்ட புதினம் நஜிமா, என்ற கதாபாத்திரத்தின் மூலம் (ப.222) புலப்படுத்துகிறது.

இதைப்போன்றே தனது மகளின் திருமண ஏற்பாடுகளிலும் இல்லற மகளிருக்கு எந்த வித முக்கியத்துவமும் கொடுக்கப்படுவதில்லை. ஆண்களே திருமணம் தொடர்பான அனைத்து முடிவுகளும் எடுக்கின்றனர். தந்தைப் பொறுப்பில் இருக்கும் ஆண்கள் தமது பெண்களுக்குத் திருமணம் முடிப்பதை இல்லறக் கடமையாக எண்ணுகின்றனர். அவர்கள் மணப்பெண்ணின் சம்மதத்தையோ வயது வேறுபாட்டையோ பொருட்படுத்துவதில்லை என்கிறது இப்புதினம். இத்தகைய நிகழ்விற்கு மேலும் வலுசேர்க்கும் வண்ணம், **"இறுதிக்கட்டத்தில் மணப்பெண்ணின் சம்மதம் சம்பிரதாயமாகக் கேட்கப்பட்டாலும் நிக்காஹ் மேடைகளில் கூட பெண்ணுக்கான ஆதாரபூர்வமான எந்த பங்களிப்பும் இல்லை. மணமகன், மணமகளின் தந்தை அல்லது பாது காவலர் மற்றும் இரு சாட்சிகள் முன்வைத்தே துஆ ஓதி திருமணம் முழுமை நடைபெறுகிறது"**[1] என்னும் ஹெச்.ஜி.ரசூலின் கருத்தாக்கம் அமைகிறது. குறிப்பாக இப்புதினத்தில் காதர் தனது மகளுக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்று தன்னிச்சையாக முடிவெடுத்த பிறகு தனது மனைவி ரைமாவுக்கு இதில் எவ்விதப் பங்களிப்பும் கொடுக்கப் போவதில்லை என்பதை சுட்டிக்காட்டும் முகமாக,

> **"அவளிடம் சம்மதம் கேட்பது தேவையில்லாமல் அவளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக மாறக்கூடும். திருமண வேலைகளைத் தொடங்கி விடுவதன் மூலமே அவளது கருத்துக்கு மதிப்பில்லை என்பதை அவளே உணரும்படி செய்யலாம்"**
>
> (ப.87)

என்று கூறும் காதரின் சொல்லாடல்கள் மூலம் இல்லற மகளிரின் கருத்துக்கள் புறந்தள்ளப்படுவதை உணரமுடிகிறது. இவ்வாறு மகளிரின் உணர்வுகள் இல்லறத்தில் அங்கீகரிக்கப்படுவதில்லை என்பதும் இச்சூழல் காலம் காலமாக இசுலாமியச் சமூகத்தில் ஆண்களால் நடந்தேறி வருகிறது என்பதும் அறிய முடிகிறது. இந்த நிலைப்பாட்டைத் தகர்க்கும் வண்ணமாகவே இல்லற மகளிரின் வரம்பு மீறல்கள் "**இரண்டாம் ஜாமங்களின் கதை**"யில் அமைந்துள்ளன என்பதும் இங்கு குறிக்கத்தக்கதாகும்.

**கைம்மை மகளிர்**

கணவனை இழந்த மகளிர் கைம்மை மகளிராவர். சமூகமானது அவர்களுக்கென்று தனி நியதிகளையும், குறியீடுகளையும் வகுத்துள்ளது. ஆனால் இசுலாமியச் சமூகத்தில் கைம்மை மகளிருக்குத் தனிமைப்படுத்தப்பட்ட நிலையோ தனி அடையாளங்களோ கொடுக்கப்படுவதில்லை. அவர்களுக்கென்று தனி நியதிகளை மட்டும் வகுத்துள்ளது. இந்நியதிக்கேற்ப, ஆண்களையே தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள இசுலாமிய மகளிர் கணவனை இழந்து விட்டால் உலக ஆடம்பரங்களில் ஈடுபட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எப்பொழுதும் இறைவனையே எண்ணிக் கொண்டிருக்க வேண்டும். தனது மனதில் எந்த உணர்வுகளுக்கும் இடம் கொடுக்காமல் கட்டுக்கோப்பான வாழ்வையே மேற்கொள்ள வேண்டும் என்று சமூகம் வலியுறுத்துவதைப் புதினம் புலப்படுத்தியுள்ளது. இச்சமூகச்

சூழலை, கணவனை இழந்த மகளிர் தனிமைத்துயரத்திலிருந்து விடுபட முடியாமல் தவிப்பதையும், அதை தமது வயது ஒத்த பெண்களிடம் பகிர்ந்து கொள்வதையும்,

> **“ஷெரிபா கவலையுடன் பாத்திமாவைப் பார்த்தாள். என்னமோம்மா நீ இப்படியெல்லாம் பேசுறது சரியில்ல. நமக்கு இது மட்டுமே வாழ்க்கையாக்கும் இதக்கூட கட்டுப்படுத்திக்கலைன்னா எப்புடி? நமக்குக் குழந்தைகள் இருக்கு, அதுகள வளர்த்தெடுக்கறதுல பெரிய சந்தோஷம் இருக்குது”(ப.270)**

என்று கூறும் ஷெரிபா - பாத்திமாவின் உரையாடல் வரிகள் மூலம் புதினம் பிரதிபலித்துக்காட்டியுள்ளது. இருப்பினும் இசுலாமியச் சமூகத்தில் மட்டும் தான் கைம்மை மகளிர் இரண்டாவது திருமணம் செய்வதற்கு வழிவகைச் செய்யபட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து மற்ற சமூகத்தில் கைம்மை மகளிர் நடத்தப்படும் நிலை குறித்தும் இசுலாமிய சமயத்தில் பெண்களின் உணர்வுகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் குறித்தும் சிந்திக்கதக்கது.

### மணமுறிவு மகளிர்

திருமண உறவை ஆண்களால் அல்லது பெண்களே முறித்துக்கொண்ட மகளிர் மணமுறிவு மகளிராவர். இசுலாமியரின் திருமணச் செயல்பாடுகளில் மணப் பெண்ணின் சம்மதத்தைப் பெறாமல் தமது இல்லத்தின் ஆண்களாலே அவர்களின் இல்லற வாழ்வு முடிவு செய்யப்படுகிறது. இதனால் அப்பெண்ணுக்கும் ஆணுக்குமிடையேயான வயது, நிறம், அழகு, கருத்து வேறுபாடு ஆகிய காரணங்களால் இல்லற வாழ்வில் விரிசல் ஏற்பட்டு மணமுறிவு ஏற்படுகிறது. **“தலாக்”** என்று சொல்லப்படும் இம்மணமுறிவு ஆண்களாலேயே இசுலாமியச் சமூகத்தில் பின்பற்றப்பட்டு வருகிறது. ஆனால் இன்றைய சூழலில் பெண் மணவாழ்விலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் பொதுவெளியில் பரவலாக பேசப்படாத **“குலா”** முறை சமூகத்தில் நிலவி வருவதைப் புதினம் பதிவு செய்துள்ளது. ஹெச்.ஜி.ரசூல், **“அரபுப் பழங்குடி சமூகத்தில் கணவனை விலக்கி வைக்கும் உரிமை பெண்ணுக்கே இருந்திருக்கிறது. பெண் தனக்கான பாலியல் தேர்வை செய்து கொள்ளும் உரிமையும் இருந்துள்ளது. தனது கூடாரத்தை விட்டு கணவன் வெளியே செல்லும்போது அதன் வாசல் கிழக்கு நோக்கி இருக்கிறது. மாலை அவன் திரும்பும்போது வாசல் மேற்கு நோக்கி மாற்றப்பட்டிருந்தால் அந்த கணவன் விலக்கி வைக்கப்பட்டிருக்கிறான் மணமுறிவு ஏற்பட்டு விட்டது என்றே அர்த்தம். இது கி.பி.570க்கு முன்னரே பெண் அனுபவித்திருந்த உரிமையாகும்”**[2] என்று கூறுகிறார். மகளிர் இல்லற வாழ்விலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளும் சூழல் காலம் காலமாக பெண்ணடிமையின் நெடிய வரலாற்றின் எதிர்ப்புக் குரலாக இருப்பினும் இறுதியில் பாதிக்கப்படுவர்கள் மகளிராகவே இருக்கின்றனர் என்னும் சூழலை புதினத்தில், பிர்தௌஸ் கதாபாத்திரம் தன்னை மறுமணம் செய்வதற்காகப் பெண் கேட்டுவரும் ஆண்கள் நாற்பது வயதை எட்டியும், குழந்தைகளுக்குத் தந்தையாகவும் இருக்கின்றனர். அதனால் அவர்களைப் புறக்கணிக்கும் சூழலில் அப்பெண்ணின் தாயே இவள் மட்டும்தான் மணவாழ்வை தானே முறித்துக் கொண்டதாகவும், இச்சூழலில் நல்ல குடும்பத்தைச் சார்ந்த ஆண்கள் அவளைத் திருமணம் செய்வதற்கு அஞ்சுவார்கள் (ப.163) என்னும் சொல்லாடலும், அவளை வீட்டிற்குள் வைத்து பூட்டிவிட்டு அவளது தாய் ஆமினா வெளியில் செல்லும் சூழலும் (ப.91) மேற்சொல்லப்பட்ட சமூகச் சூழலை உறுதி செய்துள்ளது எனலாம்.

**இசுலாமிய மகளிரும் சமூகக் கட்டுப்பாடுகளும்**

சமயமோ சமூகமோ மகளிருக்கு மட்டும் எழுதப்படாத பல சட்டங்களை வகுத்துள்ளது.

சமயத்தில் சொல்லப்பட்ட விதிமுறைகள் ஆண்களால் ஒரு பட்சமாக எடுத்துக் கொள்ளப்பட்டுப் பெண்களை அடிமைப்படுத்துதல் காலம் காலமாக சமயத்தின் பெயரால் நடந்தேறி வருகிறது. இசுலாமியச்சமயத்தில் ஆண்கள் நான்கு மனைவிகள் வரை வைத்திருக்கும் 'பலதாரமணமுறை" அனுமதிக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாக தங்கள் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் **"தலாக்"** என்னும் தூக்குக்கயிற்றினால் இசுலாமியப் பெண்கள் உளவியல் ரீதியாக பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்பதை அறியலாம். இதுகுறித்து, **"திருக்குர்ஆன் முன்வைக்கும் பலதாரமணம் தொடர்பான வசனங்கள் (அன்னிஸா அத்தியாயம் 4 வசனம் 3) யுத்தக்கால சூழல்களில் முன்வைக்கப்பட்டவை. பெற்றோரை இழந்த பாதிப்புக்குள்ளான அநாதைக்குழந்தைகள், கணவனை இழந்த விதவைத் தாய்கள், போர்களில் பிடிக்கப்பட்டு கைதிகளாக வைக்கப்பட்டிருந்த அடிமைப் பெண்கள் ஆகியோரை மையப்படுத்தியே உள்ளன. இந்த யுத்த சூழல் சார்ந்த அர்த்தத்தை அமைதிக்கால சூழல்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற பெண்களின் மீது திணிப்பது சரியான அணுகு முறையல்ல"**[3] என்பார் ரசூல். இத்தகைய சூழலில் கணவனால் வன்முறைக்கு உள்ளான பெண் **'குலா"** என்னும் மணவிலக்கு பெற்றாலும் சமூகமே அப்பெண்ணை இழிவாக நினைக்கக்கூடிய நிலையைப் புதினம் பிரதிபலிக்கிறது. குறிப்பாக, "பிர்தௌஸ்" கதாபாத்திரம் மணவிலக்கு பெற்ற பின் வெளியில் தலைகாட்ட முடியாததையும், ஊர் மக்கள் தன்னை ஏளனம் செய்து கேவலமாகப்பார்க்கும்நிலையையும்(ப.33) புதினம் எடுத்துக் கூறுவதின் வழி அறியலாம்.

அதே போன்று ஆணின் பாலியல் தேவைக்கு மாற்று மத பெண்களோடு உறவு வைத்துக்கொள்ளுதல் இசுலாமிய சமூகத்தில் தவறாகக் கருதப்படுவதில்லை. ஆனால் பெண்ணின் பாலியல் தேவைக்கு மாற்று மத ஆண்களோடு தொடர்பு கொண்டால் பெண்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவதும் தற்கொலைக்கு உட்படுத்தப்படுவதும் நிதர்சனம். இத்தகைய நிலையை, 'மணமுறிவு பெற்ற பிர்தௌஸ் தனது இளமைக்கால தனிமைத் துன்பத்தை நீக்குவதற்காகப் பிற சாதியைச் சார்ந்த சிவாவிடம் தொடர்பு கொண்டவுடன் அவளது தாய் எலி மருந்தைக் கலக்கிக் கொடுத்துத் தற்கொலைக்கு அவளை நிர்பந்தப்படுத்தும் (ப.414) காட்சி வழி புலப்படுத்தியுள்ளது இரண்டாம் ஜாமங்களின் கதைப் புதினம்.

மேலும் சமூகக் கட்டுப்பாடுகளை வென்றெடுக்கும் சூழலில் மகளிருக்கு பன்முக அடக்குமுறைகள் காலம் காலமாக இருந்துகொண்டே வருகிறது என்பதும் கவனிக்கத்தக்கதாகும். இது குறித்து, **"திருமணத்திற்கு முன்பே முறைதவறிய பாலியல் உறவுகளில் ஈடுபட்டவர்களுக்கு நூறு சவுக்கடிகளும், நாடு கடத்தலும், திருமணத்திற்குப் பிறகு முறை தவறிய உறவுகளில் ஈடுபட்டவர்களுக்கு ரஜ்ம் என்னும் கல்லெறித் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது."**[4] என்கிற இயைபுபடுத்துகிற செய்தியும் அறியப்படவேண்டியதாகும். இது ஆண் பெண் இரு பாலருக்கும் பொதுவான தண்டனை முறையாகச் சொல்லப்படுகிறது. '**இரண்டாம் ஜாமங்களின் கதை**"ப்புதினத்தில் முறை தவறிய உறவுகளில் பெண்களே தண்டனைக்கு உள்ளாக்கப்படும் நடப்பியல் நிகழ்வை, 'பாத்திமா தன் கணவன் பிரிந்து சென்ற நிலையில் மற்றொரு ஆணோடு ஊரைவிட்டுச் செல்லும் சூழலில் அவ்வூரைச் சேர்ந்த ஜமாத்துகள் அப்பெண்ணை ஊருக்குள் அனுமதிக்கக் கூடாது என்றும்,

அவளது குடும்பத்தை ஊர் விலக்கி வைப்பதும், அக்குடும்பக் காரியங்களில் ஊர்மக்கள் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாது என்று கூறுவதையும் (ப.273) புதினம் பதிவு செய்துள்ளதை அறியலாம்.

**இசுலாமிய மகளிரும் சமயக் கட்டுப்பாடுகளும்**

இசுலாமிய மகளிருக்கு சமயத்தின் பெயரால் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. பருவ வயதை அடைந்தால் பெண்கள் வெளியில் செல்லவோ, மற்ற ஆண்களைப் பார்க்கவோ சமயத்தில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதை நியாயப்படுத்த **"பெண்கள் தங்கள் பார்வைகளை தாழ்த்தியே இருக்க வேண்டும்"**[5] என்கிற திருமறை வசனக் குறிப்பை முன்னெடுத்துக்காட்டுபவர்கள் அதற்கு முந்தைய வசனத்தை எளிதாக மறந்து விடுகிறார்கள். இதனை, **"நபியே விசுவாசிகளான ஆண்களுக்கு நீர் கூறும் அவர்கள் தங்கள் பார்வைகளை கீழ் நோக்கியே வைக்கவும். தங்கள் கற்பையும் இரட்சித்துக் கொள்ளவும் இது அவர்களை பரிசுத்தமாக்கி வைக்கும்"**[6] என்ற வசனத்தின் மூலம் ஆண்களும் ஒழுக்கவிதிகளைப் பின்பற்ற வேண்டும் என்பது புலனாகிறது. இதையே புதினத்தில், பருவ வயதை அடைந்த பரிதா பிற ஆண்கள் முகத்தில் முழிக்கக்கூடாது (ப. 22) என்று கூறுவதின் மூலம் இக்கட்டுப்பாடு பெண்களுக்கு மட்டுமே நடைமுறைப் படுத்துவதை அறியமுடிகிறது.

அதே போன்று மகளிர் வெளியில் செல்லும் பொழுது உடல் முழுவதும் மூடுகின்ற **'பர்தா'** என்று சொல்லப்படும் துணியால் மூடிக்கொள்ள வேண்டும் என்னும் சமயக்கட்டுப்பாட்டை பிரதிபலிக்கும் வண்ணம் புதினத்தில், ரைமாவும் தங்கை சொகராவும் இறப்பு வீட்டிற்கு செல்லும் பொழுது வெள்ளை நிறத்துப்பட்டியினால் தங்கள் உடம்பை முழுவதுமாகச் சுற்றிக்கொள்வதை (ப.23) எடுத்துரைப்பதின் மூலம் அறியலாம். இதுகுறித்து, **"முகத் திரையிடுதல் மற்றும் பர்தா முறை குறித்து எந்தவிதக் குறிப்பையும் திருக்குர்ஆனில் காணமுடிவதில்லை."**[7] என்னும் ரசூலின் கருத்தானது இங்கு கவனிக்கத்தக்கது.

இதைப்போன்றே இறைவழிபாட்டில் மகளிர் ஆண்களோடு சேர்ந்து வழிபடவோ தொழுகைப் பள்ளிக்குள் செல்லவோ அனுமதி மறுக்கப்பட்டுள்ளதைப் புதினத்தில், ராபியா என்ற சிறுமி தன் தாயிடம் பள்ளிவாசலுக்குள் ஏன் தான் செல்லக்கூடாது என்று கேட்கிறாள். அதற்கு அவளது தாய், "பொம்பளைங்க பள்ளிக்குள்ள போகக்கூடாது" (ப.187) என்று கூறுவதின் மூலம் அறியலாம். இதற்கு, **"வெர்ஜீனியா காமன்வெல்த் பல்கலைக்கழகப் பேராசிரியை அமினா வதூத் நியூயார்க் நகரில் பெண்களுக்குப் பின்னால் ஆண்களையும் உள்ளடக்கிய முஸ்லிம்களுக்கு மார்ச் 18, 2005-ல் வெள்ளிக் கிழமை ஜீம்மா தொழுகையை பெண்ணே இமாமாக நிகழ்த்தினார்"**[8] என்னும் நிகழ்வானது மரபை மீறிய புரட்சிகரமான செயல்பாடாக இங்கு நினைவு கூரத்தக்கது.

**முடிவாக**

சல்மாவின் **"இரண்டாம் ஜாமங்களின் கதை"ப்** புதினம் மரபான இசுலாமியர்களிடையே அதிர்வலைகளை ஏற்படுத்திய புதினமாகும். இப்புதினத்தில் இசுலாமிய இல்லற மகளிர், கைம்மை மகளிர், மணமுறிவு மகளிர் அனைவரும் ஆண்களின் ஆதிக்கத்தில் உள்ளடங்கி காணப்படுவதை அறியமுடிகிறது. இசுலாமிய ஆணாதிக்கத்திற்கு வலு சேர்க்கும் வகையில் சமயமும், சமூகமும் பல்வேறு கட்டுப்பாடுகளை இசுலாமிய மகளிருக்கு விதிக்கப்பட்டுள்ளதை இப்புதினம் வெளிப்படுத்தியுள்ளது.

### குறிப்புகள்

1. ஹெச்.ஜி.ரசூல், இஸ்லாமியப் பெண்ணியம், ப.11
2. மேலது, ப.10
3. மேலது, ப.6
4. மேலது, ப.33-34
5. மேலது, ப.16
6. --------------,திருக்குர்ஆன், ப.100
7. ஹெச்.ஜி.ரசூல், மு.க.நூ., ப.17
8. ஹெச்.ஜி.ரசூல், பின் நவீனத்துவ வாசிப்பில் இஸ்லாம் பிரதிகள், ப.100

### துணைநூற்பட்டியல்

1. சல்மா. 2009. *இரண்டாம் ஜாமங்களின் கதை*, நாகர்கோவில், *காலச்சுவடு வெளியீடு*.
2. ரசூல், ஹெச்.ஜி. 2006. இஸ்லாமியப் பெண்ணியம், சென்னை, பாரதி புத்தகாலயம்.
3. ஞான. அலாய்சியஸ். 2005. *பெரியார் பார்வையில் இஸ்லாமும் புத்தமும்*, ஈரோடு, புதுமலர் பதிப்பகம்.
4. அறவாணன், க.ப. 1994. *தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்*. புதுச்சேரி தமிழ்க்கோட்டம்.
5. அறவாணன், க.ப. 2012. *இஸ்லாமியர் காலத் தமிழ் மக்கள் வரலாறு*. சென்னை, தமிழ்க்கோட்டம்.
6. களந்தை பீர்முகம்மது. 2008. *காலச்சுவடு பதிவுகளில் இஸ்லாம்*, நாகர்கோவில், காலச்சுவடு பதிப்பகம்.
7. திருமலை, ம. 1988. *புனைகதை இலக்கியப் பொலிவு*, சென்னை, ஐந்திணைப் பதிப்பகம்.
8. பரமசிவன், தொ. 2010. *பண்பாட்டு அசைவுகள்*, நாகர்கோவில், காலச்சுவடு பதிப்பகம்.
9. மஹதி. 2011. *இஸ்லாம் பரவிய வரலாறு*, சென்னை, யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்.
10. ரசூல், ஹெச்.ஜி. 2008. குர் ஆனிய மொழியாடல்கள் மீள்வாசிப்பின் தருணம், தக்கலை, சரம் வெளியீட்டகம்.